| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **19/2022** |
| **DATE** | : | **17.07.2026** |
| **பெயர்** | : | **நாகேஷ்வரன்** |
| **தந்தை பெயர்** | : | **செஞ்சி நாயக்கர்** |

**வாதி தரப்பு பி.வா.சா. 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

14. பி.வா.சா.ஆ–3 பட்டா நான் 2014ல் வாங்கியுள்ளேன். அசல் பட்டா தாக்கல் செய்யவில்லை, கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா தாக்கல் செய்துள்ளேன். நான் 2014ல் பட்டா வாங்கவில்லை வழக்கிற்காக தற்போது தான் பட்டா வாங்கினேன் அதனால் தான் அசல் பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணன் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. எனது கடைசி தங்கை கோட்டிஸ்வரி பி.எஸ்.சி படித்துள்ளார். 3வது தங்கை கோவிந்தம்மாள் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளார். மற்ற 2 தங்கைகளும் படிக்கவில்லை. எனது அண்ணன் 6ம் வகுப்பு வரை படித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

15. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையில் 6ம் பத்தியில் எனது அண்ணன் 6ம் வகுப்பு வரை தான் படித்துள்ளார், அவருக்கு எந்த வருமாணமும் கிடையாது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனது குடும்பத்தில் எனது பெற்றோர்கள், எனது அண்ணன் மற்றும் மூத்த தங்கைகள் இரண்டுபேரும் சேர்ந்து கஷ்டப்பட்டு என்னை படிக்க வைத்தார்கள் என்றால் சரிதான். விவசாயம் பொய்த்து போன காலங்களில் அவர்கள் கூலி வேலைக்கு சென்று சம்பாதித்தார்கள் என்றால் சரிதான். எனது அண்ணன் விவசாயம், கூலி தொழில் ஆகியவற்றில் சரியான வருமாணம் வராததால் ஊரில் ஒரு மளிகை கடை வைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த வருமாணத்தை வைத்து தான் தாவா சொத்து வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

16. எனது தந்தைக்கு வயதானதால் வேலைக்கு சென்று வருமாணம் ஈட்ட முடியாததால் அவர் புதிதாக எந்த சொத்தும் வாங்கவில்லை, இருந்த சொத்துக்களை

தான் பராமரித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து வாங்குவதற்கு எனது தந்தை வாதிக்கு எந்த உதவியும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, பணம் கொடுத்துள்ளார். அவ்வாறு பணம் கொடுத்தற்கான ஆவணம் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

17. எனது தந்தைக்கு நான் பணம் அனுப்பியதற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது பெற்றோருக்கு கொடுத்ததால் ரசீது எதுவும் போடவில்லை. தாவா சொத்து வாங்குவதற்காக எனது தந்தையிடம் ரூ.2ஆயிரம் கொடுத்தேன், அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அந்த பணம் எந்த தேதியில் எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்று ஞாபகமில்லை. வேலைக்கு சேர்ந்த உடன் கொடுத்தேன். நான் 1997ல் வேலைக்கு சேர்ந்தேன். தேதி, மாதம் ஞாபகமில்லை.

18. நான் குடும்பத்தை பார்த்துக் கொள்வேன் என்று நினைத்து தான் எனது குடும்பத்தில் உள்ள அனைவரும் என்னை படிக்க வைத்தார்கள், நான் படித்து முடித்துவிட்டு எனது சொந்த வாழ்க்கையை மட்டும் பார்த்துக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி தானாகவே முன்வந்து 10 வருடங்களுக்கு முன்பே எனது அண்ணன் திருமணம் செய்து கொண்டு தனிக்குடித்தனம் சென்றுவிட்டார், நான் தான் எனது குடும்பத்தை பார்த்துக் கொண்டேன். எனது அண்ணன் தனிக்குடித்தனம் சென்றுவிட்டார் என்று தெரிவித்துள்ளேன் எங்கு வசித்தார் என்றால் எனது பெற்றோரின் வீட்டிலேயே தனிக்குடித்தனம் இருந்தார். அந்த வீடு தரைத்தளம் கொண்டது, 1 hall, 2படுக்கை அறைகள், 1 சமையலறை கொண்டது. எனது பெற்றோர்கள் உடனேயே தான் எனது அண்ணன் தங்கி வந்தார் என்றால் சரிதான்.

19. எனது முதல் 3 தங்கைகளுக்கு எனதுஅண்ணன் தான் எனது பெற்றோருடன் சேர்ந்து திருமணம் செய்து வைத்தார் நான் எந்த உதவியும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தற்போது வரை அவர்கள் கஷ்டப்பட்டு கொண்டு தான் உள்ளார்கள் அவர்களுக்கு நான் எந்த உதவியும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தங்கைகளுக்கு எனது அண்ணன் தான் தற்போது வரை தாய் வீட்டு சீர் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான்

எப்போவாவது எனது தங்கைகளுக்கு சீர் செய்வேன் தொடர்ச்சியாக செய்யும் வழக்கம் இல்லை.

20. எனது அண்ணன் எனக்கு எழுதி கொடுத்த சொத்திற்கு பின்புறத்தில் தான் எனது பாக சொத்து அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து அல்லாமல் எனது சொத்திற்கு செல்வதற்கு வேறு எந்த வழியும் இல்லை. நான் எனது அண்ணணிடம் என் சொத்திற்கு செல்வதற்கு வழி வேண்டும் என்பதற்காக தாவா சொத்தை எழுதி வாங்கிவிட்டு அதற்கு பதிலாக இரண்டு மடங்கு சொத்து வாங்கி தருவதாக வாக்கு கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

21. எனது அண்ணன் பல முறை நான் கூறியவாறு சொத்தை எழுதி தர கேட்டும் நான் காலம் கடத்தி வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணன் தான் தாவா சொத்தை வாங்கியதில் இருந்து எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்ததற்கு பிறகும் இன்று வரை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

FANNY RAJAN
Principal District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN